பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

07 11 2024 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- முன்னாள் ராணுவ வீரர்களின் தியாகத்தையும், வீரத்தையும் போற்றும் வகையில் ஒரு பதவி - ஒரு ஒய்வூதியம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- தீவிரவாதத்தை ஒழிக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

- ஆஸ்திரேலியாவில், 16 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களை பயன்படுத்த தடை விதிக்கும் சட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது

- தமிழகம், புதுச்சேரி, காரைக்காலின் ஒரு சில பகுதிகளில் இன்று முதல் வரும் 12-ஆம் தேதிவரை, கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

- கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் கிரண் ஜார்ஜ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>*----இனி விரிவான செய்திகள்----*</u>

<<<<<<>>>>>

கடலில் ஒருநாள்” நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக கோவா சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுக்கு, கோவா விமான நிலையத்தில் அம்மாநில அரசு சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து, ஐ என் எஸ் ஹன்ஷா கடற்படை விமான தளத்தை அவர் பார்வையிட்டார்.

அங்கு அவருக்கு கடற்படை சார்பில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

இன்று பிற்பகல் ஐ என் எஸ் -விக்ராந்த் விமானம் தாங்கி போர் கப்பலிலிருந்து மேற்கொள்ளப்படும் கடற்படை செயல்பாடுகளை அவர் பார்வையிடுகிறார்.

இதில் 150-க்கும் மேற்பட்ட கடற்படை வீரர்கள் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

மத்திய அரசு கொண்டு வந்த முன்னாள் ராணுவத்தினருக்கான ஒரு பதவி - ஒரு ஒய்வூதியம் திட்டம் இன்றுடன் பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

முன்னாள் ராணுவத்தினர் நியாயமான மற்றும் சமமான ஓய்வூதியம் பெறுவதை உறுதிபடுத்தும் வகையில் இத்திட்டத்தினை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், முன்னாள் ராணுவ வீரர்களின் தியாகத்தையும், வீரத்தையும் போற்றும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் இத்திட்டத்தின் மூலம், பல லட்சம் முன்னாள் ராணுவத்தினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன்பெற்றிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இத்திட்டமானது பாதுகாப்புப்படைகளின் நலன்களில் அரசு காட்டிவரும் உறுதிபாட்டை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புப்படைகளை வலுப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் அரசு உடனடியாக மேற்கொள்ளும் என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், நாட்டுக்காக சேவையாற்றும் பாதுகாப்புப் படையினரின் நலன்களை முன்நிறுத்தும் திட்டங்களை அரசு தொடர்ந்து செயல்படுத்தும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தீவிரவாதத்தை ஒழிக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தீவிரவாத எதிர்ப்பு மாநாட்டை அவர் தொடங்கிவைத்து பேசினார்.

தேசிய புலனாய்வு முகமை ஏற்பாடு செய்துள்ள இந்த இரண்டு நாள் மாநாட்டில், தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை உத்திகள், அதுதொடர்பான சட்டம் மற்றும் தொழில்நுட்பம் குறித்து விவாதிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் தீவிரவாத தடுப்பு தொடர்பான மத்திய முகமைகள் மற்றும் மாநில அரசுகளின் காவல்துறை உயரதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<>>>>>

தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுவதையொட்டி, தேசிய மருந்துப்பொருட்கள் விலை நிர்ணய ஆணையம் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது

புற்றுநோய் சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படும் 42 வகையான மருந்துகளின் விலை 90 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மத்திய அரசின் இந்த நடவடிக்கை காரணமாக, புற்றுநோய் சிகிச்சைக்கான மருந்துகளின் விலை பெரும்பாலும் குறைக்கப்பட்டுள்ளது.

மொத்தம் நான்கு பிரிவுகளின்கீழ், இந்த மருந்துகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

20 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 124 மருந்துகளின் விலை குறைக்கப்பட்டுள்ளதாகவும், 25 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பெமிஸ்டார் 500 மருந்தின் விலை தற்போது 2 ஆயிரத்து 509 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளதாக அரசு கூறியுள்ளது.

நாடு முழுவதிலும் விற்பனை செய்யப்படும் மருந்துகளின் விலை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், சராசரி விலையை கட்டுப்பாட்டுக்குள் வைப்பது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசு கூறியுள்ளது.

நாட்டில் புற்றுநோய் அதிகரித்து வருவதன் காரணமாக, இந்திய மருத்துவ முறைகளையும் சிகிச்சைக்கு பயன்படுத்துவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

புற்றுநோய் என்றவுடன் அச்சம் ஏற்படுவதை தவிர்க்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

உடல் நலத்தை பாதுகாப்பாக வைப்பதற்கு மருத்துவ உடல் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று கூறுகிறார் **Ikris Pharma** நிறுவனத்தின் தென்மண்டல இயக்குனர் திரு ஐய்யப்பன்.

*(வாய்ஸ் பைட் - ஐயப்பன் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

ஆஸ்திரேலியாவில், 16 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களை பயன்படுத்த தடை விதிக்கும் சட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

அந்நாட்டு பிரதமர் திரு **Anthony Albanese** சிட்னியில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசியபோது இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இளையோரின் மனநலத்தை பாதுகாக்கும் வகையிலும், அவர்கள் மீது சமூக வலைதளங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை குறைக்கும் வகையிலும் இச்சட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆன் லைன் தளங்களை பயன்படுத்தும் இளையோரின் பாதுகாப்பை உறுதிபடுத்தும் வகையில் இது அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக, அந்நாட்டு தொலைத்தொடர்பு அமைச்சர் திருமதி மிச்சல் ரோலண்ட் பேசுகையில், இளையோரின் வயதை உறுதிபடுத்தும் வகையில், சம்பந்தப்பட்ட சமூக வலைதளங்கள் பிரத்யேகமான முறைகளை கையாளலாம் என்று தெரிவித்தார்.

பேஸ்புக், இண்ஸ்டாகிராம், டிக் டாக் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் இதனை பின்பற்ற தவறினால் கடும் அபராதம் விதிக்கப்படும் என்றும் ஆஸ்திரேலிய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

ஸ்பெயின் நாட்டின் கிழக்கு பகுதிகளில் பெய்த மழை மற்றும் வெள்ளம் காரணமாக இதுவரை 217 பேர் உயிரிழந்துள்ள நிலையில், 89 பேரை காணவில்லை என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

12 ஹெலிகாப்டர்கள், 18 படகுகள், காவல்துறை மற்றும் பாதுகாப்புப்படையை சேர்ந்த ஐந்தாயிரம் வீரர்கள் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

தமிழகம், புதுச்சேரி, காரைக்காலின் ஒரு சில பகுதிகளில் இன்று முதல் வரும் 12-ஆம் தேதிவரை, கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், ஆந்திரப்பிரதேசத்தின் கடலோர பகுதிகள், யாணாம், ராயலசீமாவின் ஒரு சில இடங்களில் வரும் 9 மற்றும் 10-ஆம் தேதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திராவையொட்டிய கடலோர பகுதிகளில் இன்றும், நாளையும் சூறாவளி காற்று மணிக்கு 35 கிலோமீட்டர் முதல் 45 கிலோமீட்டர் வேகத்திலும் இடையே இடையே 55 கிலோமீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்றும் அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மயிலாடுதுறை, நாகப்பட்டினம் உள்ளிட்ட மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிற பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை எதிர்க்கட்சியினரின் அமளி காரணமாக இன்று ஒத்திவைக்கப்பட்டது.

ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் சிறப்பு அந்தஸ்து வழங்கக்கோரும் தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நேற்று நிறைவேற்றப்பட்டதாக ஜம்மு காஷ்மீர் துணை முதலமைச்சர் திரு சுரீந்தர் குமார் சௌத்ரி தெரிவித்த நிலையில், இன்று கூட்டத்தொடர் தொடங்கியதும் பிஜேபி உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அமளியில் ஈடுபட்டனர்.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் கிரண் ஜார்ஜ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 19-21, 21-17 என்ற செட் கணக்கில் தைவானின் **Yu Jen Chi** –வை வென்றார்.

<<<<<<>>>>>

இந்தியா “ஏ” அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று ஆஸ்திரேலியா “ஏ” அணி முதல் இன்னிங்சில் ஆட்ட நேர இறுதியில் 2 விக்கெட் இழப்பிற்கு 53 ரன் எடுத்துள்ளது.

மெல்போர்னில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்ற ஆஸ்திரேலியா “ஏ” அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதையடுத்து, பேட் செய்த இந்தியா “ஏ” அணி, முதல் இன்னிங்சில் 161 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<<<>>>>>